[22nd August 1960

The meeting resolved that till all cases pending against Taxi Drivers in respect of the incident of 26th February 1960 near Wellington Talkies are withdrawn, the strike should be continued, and the Union should take steps for the release of all those Taxi Drivers who had gone to Jail.

(b) No action was taken, as the communication was not in the form of a petition to Government stating the grounds and circumstances of the case and as the strike had ended.

SRI A. A. RASHEED : May I know, Sir, the number of taxi drivers who were prosecuted and convicted in the courts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry, I don't have that information with me.

SRI N. MAHALINGAM : பொது மக்களிடம் சென்னையில் டாக்ஸி டிரைவர்கள் சரியான முறையில் நடந்து கொள்வது இல்லை என்பது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அம்மாதிரி டாக்ஸி டிரைவர்கள் சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில டாக்ஸி டிரைவர்கள் பற்றி அம்மாதிரி புகார்களும் உண்டு. இதையெல்லாம் கவனித்துத்தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள்.

Co-operative societies for the maintenance of dry cows

* 362 Q.—SRI S. M. ANNAMALAI : (on behalf of Sri M. P. SARATHI) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) பால் வற்றிய மாடுகளின் பராமரிப்புக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) 1959–60-ல் அவைகளுக்குக் கடன்கள், மான்யங்கள் முறையே எவ்வளவு வழங்கப்பட்டுள்ளன ?

(இ) இந்தச் சங்கங்களை மேற்பார்வையிடும் அலுவலரில் (Inspectors) யாருக்காவது கால்நடை மருத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Six Salvage Farms established for the Salvage of dry cattle are in existence and they are managed by the Co-operative Milk Supply Unions and Societies.

(b) A total subsidy of Rs. 21,326·50 nP. and a loan of Rs. 9,000 have been sanctioned by the Government during 1959-60 for the salvage farms.

(c) No, Sir.

22nd August 1960]

SRI S. M. ANNAMALAI: இம்மாதிரிப் பண்ணைகள் 6 இடங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். எங்கெங்கே என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நாலு "பாரம்கள்" திருநெல்வேலி ஜில்லாவில் அபிஷேகப்பட்டியிலும், திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் துவக்குடியிலும், கோயமுத்தூர் ஜில்லாவில் வீரபாண்டியிலும், ராமநாதபுரம் ஜில்லாவில் விருதுநகரிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH: கோவில்பட்டி தாலுகா ஒட்டப் பிடாரம் என்னும் இடத்தில் அம்மாதிரிப் பண்ணை இருக்கிறதா? அது என்ன நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI S. M. ANNAMALAI: மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றித் தகவல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு பண்ணைகளைப் பற்றி தகவல் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த இரண்டு பண்ணைகளை வேறு எங்காகிலும் ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் உத்தேசிப்பார்களா ? அல்லது அவைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சர்க்காரிலே பண்ணைகள் நடத்துகிறார்கள். அதுமாதிரிப் பண்ணை சென்னை நகரத்திற்கு அண்மையில் ஒரு இடத்தில் நடத்தப்படுகிறது. என்னிடம் மூலக் கேள்விகளைப்பற்றிய தகவல் இருந்தனவே தவிர மற்ற தகவல்கள் இல்லை என்றுதான் சொன்னேனே தவிர இது பற்றி ஒன்றும் அரசாங்கத்திற்குத் தெரியாது என்று அர்த்தமல்ல.

Murders in Tiruvannamalai and Chengam taluks

* 363 *Q.*—SRI S. M. ANNAMALAI: (on behalf of Sri P. U. SHANMUGAM): கனம் உள்விவகார அமைச்சரவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, செங்கம் தாலூகாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை கொலைகள் நடைபெற்றன ?

(ஆ) அவைகளில் எத்தனை இன்னும் துப்பு துலக்கப் படாமல் இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 10 in 1957; 8 in 1958; 6 in 1959; and 3 in 1960 up to date.

(*b*) 2 in 1957 and 2 in 1959.

SRI A. A. RASHEED: Sir, is it a fact that murders in North Arcot district have been on the increase in recent years? If so may I know the reason, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The hon. Member may draw his own conclusion. I have just furnished the particulars about it.